DINAMALAR

PAGE NO: 13 DATE: 30.12.2023

# புதுச்சேரி பல்கலை வேந்தராக துணை ஜனாதிபதி நியமனம்

**புதுச்சேரி,டிச.30–**

புதுச்சேரி பல்கலைக் கழக வேந்தராக துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் நியமிக்கப் பட்டுள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகம் மத்திய பல்கலைகழகங்களில் ஒன்றாகும். கடந்த 1985ல் நிறுவப்பட்ட இப்பல்கலையின் கீழ் 59 கல்லூரிகள்இணைக்கப் பட்டுள்ளன.

இதன் கிளைகள் புதுச்சேரி, காரைக்கால், அந்தமான் நிக்கோபார் மற்றும் லட்சத்தீவுகளில் உள்ளது. இது 13 இயற்புலன்களை உடையது. இப்பல்கலையின் வேந்தராக துணை ஜனாதிபதியும், நிர்வாக பணிகளை துணை வேந்தர் கவனித்து வருகின்றனர்.



ஜக்தீப் தன்கர்

அதனடிப்படையில் புதுச்சேரி பல்கலையின் வேந்தராக துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான அறிவிப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

DAILY THANTHI

PAGE NO: 10 DATE: 30.12.2023

### மத்திய பல்கலைக்கழகத்தின் வேந்தராக

# துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் நியமனம்

## அதிகாரப்பூர்வ அறிவிப்பு

புதுச்சேரி, டிச.30-

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் வேந்தராக துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**மத்திய பல்கலைக்கழகம்**

புதுவை காலாப்பட்டு பிள்ளைச்சாவடியில் மத்திய பல்கலைக்கழகம் உள்ளது. இந்த பல்கலைக்கழகத்தில் புதுச்சேரி மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 6 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவ-மாணவிகள் படித்து



ஜெகதீப் தன்கர்

வருகிறார்கள்.

இந்த பல்கலைக்கழகத்தின் வேந்தராக வெங்கையா நாயுடுவுக்கு பின், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் பொறுப்பு ஏற்றார். ஆனால் அதற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியிடப்படாமல் இருந்தது.

**அதிகாரப்பூர்வ அறிவிப்பு**

இந்தநிலையில் புதுவை பல்கலைக்கழகத்தின் வேந்தராக துணை ஜனாதிபதியான ஜெகதீப் தன்கர் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டு உள்ளார். இந்த தகவலை புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் ரஜ்னீஷ் பூடானி (பொறுப்பு) தெரிவித்துள்ளார்.

DINAKARAN

PAGE NO: 14 DATE: 30.12.2023

# புதுவை பல்கலை வேந்தராக துணை ஜனாதிபதி நியமனம்

புதுச்சேரி, டிச. 30: காலாப்பட்டில் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. இங்கு நாடு முழுவதும் இருந்து மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த குர்மீத் சிங் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து, பல்கலையின் மூத்த இயக்குநர் தரணிக்கரசு பொறுப்பு துணைவேந்தராக சமீபத்தில் நியமிக்கப்பட்டார். மேலும், புதிய துணைவேந்தரை நியமிப்பதற்கான தேடல் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய பல்கலைக்கழகமான புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு துணை ஜனாதிபதி தான் வேந்தராக செயல்படுவார். அதன்படி, புதிய துணை குடியரசு தலைவர் ஜக்தீப் தன்கருக்கு பல்கலைக்கழக விதிகளின் படி தற்போது புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 5ம் தேதி முதல் அவர் நியமிக்கப்பட்டதற்கான அரசாணை அலுவலக கெசட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இத்தகவலை பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

THE HINDU TAMIL

DATE: 30.12.2023

PAGE NO: 04

# புதுச்சேரி மத்திய பல்கலை.யின் வேந்தர் துணை குடியரசுத் தலைவர்

**புதுச்சேரி**

குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் வேந்தராக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக பதிவாளர்(பொறுப்பு ) ரஜ்னீஷ் பூடானி வெளியிட்ட உத்தரவு: புதுச்சேரி பல்கலைக்கழகச் சட்டம் 1985 1(1)ஐ மாற்றப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவின் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருப்பார். இது அதிகாரப்பூர்வ அரசிதழில் கடந்த டிசம்பர் 5-ம் தேதி வெளியிடப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். வழக்கமாக குடியரசு துணைத் தலைவர், புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் வேந்தராக இருப்பது நடைமுறை. அதன்படி, குடியரசு துணைத் தலைவர் வெங்கய நாயுடு மாற்றத்துக்குப் பிறகு, தற்போது அரசிதழில் முறைப்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

TAMIZH MURASU

PAGE NO: 02 DATE: 30.12.2023

# புதுவை பல்கலை வேந்தராக துணை ஜனாதிபதி நியமனம்

புதுச்சேரி, டிச. 30-

காலாப்பட்டில் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. இங்கு நாடு முழுவதும் இருந்து மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பல்கலைக்கழகதுணை வேந்தராக இருந்த குர்மீத் சிங் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து, பல்கலையின் மூத்த இயக்குநர் தரணிக்கரசு பொறுப்பு துணைவேந்தராக சமீபத்தில் நியமிக்கப்பட்டார். மேலும், புதிய துணைவேந்தரை நியமிப்பதற்கான தேடல் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. மத்திய பல்கலைக்கழகமான புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு துணை ஜனாதிபதி தான் வேந்தராக செயல்படுவார்.

அதன்படி புதிய துணை குடியரசு தலைவர் ஜக்தீப் தன்கருக்கு பல்கலைக்கழக விதிகளின்படி தற்போது புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 5ம்தேதி முதல் அவர் நியமிக்கப்பட்டதற்கான அரசாணை அலுவலக கெசட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இத்தகவலை பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.